பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 02 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.
2. நீர்நிலைகளை பாதுகாக்கும் வகையில் 'நீர்நிலை யாத்திரை' இன்று தொடங்குவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
3. நாட்டில் அந்நிய நேரடி முதலீடு நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 26 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை கூறியுள்ளது.
4. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கப்பதிவு காலை ஏழு மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது.
5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்திய அணியில் வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டுள்ளதாக பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று பங்கேற்கிறார்.

உலகின் மிகப்பெரிய ஆன்மீக திருவிழாவாக கருதப்படும் மகா கும்பமேளாவையொட்டி திரிவேணி சங்கமத்தில் பிரதமர் புனித நீராடி வழிபாடு செய்யவுள்ளார்.

பிரயாக்ராஜில் குழுமியுள்ள சாதுக்கள் மற்றும் துறவிகளையும் அவர் சந்திக்கவுள்ளார்.

கடந்த மாதம் தமது மன்-கி-பாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், இந்த கும்பமேளா வேற்றுமையில் ஒற்றுமையை வெளிப்படுத்தும் திருவிழாவாக கொண்டாடப்படுவதுடன், ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி அனைவரும் சங்கமிப்பது நாட்டின் ஒற்றுமையை பிரதிபலிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையால் தீவிரவாத தாக்குதல்கள் மற்றும் ஊடுருவல் சம்பவங்கள் குறைந்திருப்பதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று ஜம்மு-கஷ்மீர் பாதுகாப்பு நிலவரம் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய அவர், கஷ்மீரிலிருந்து தீவிரவாத அமைப்புகளுக்கு இளைஞர்களை தேர்வு செய்வதும் பெருமளவு குறைந்திருப்பதாகக் கூறினார்.

தீவிரவாதத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படையினரை அறிவுறுத்திய அவர், மத்திய மாநில படைகள் ஒருங்கிணைந்து பணியாற்றி ஜம்மு-கஷ்மீரில் தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டுமெனவும் திரு அமித்ஷா வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

நீர்நிலைகளை பாதுகாக்கும் வகையில் 'நீர்நிலை யாத்திரை' இன்று தொடங்குவதாக அத்துறைக்கான மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீர்நிலை மேம்பாட்டுப் பணிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 26 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட ஆறாயிரத்து 673 கிராம பஞ்சாயத்துக்களில் இந்த யாத்திரை நடத்தப்பட இருப்பதாகக் கூறினார்.

நீர்நிலைகள் நமக்கு செல்வத்தையும், தானியங்களையும் தருகிறது என்பதே இந்த யாத்திரையின் மையக்கருத்தாக இருக்கும்.

இந்த யாத்திரையின்போது தண்ணீர் பாதுகாப்பு மற்றும் மண்ணின் தன்மையை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட இருப்பதால் மக்கள் இதில் பெருமளவில் பங்கேற்குமாறும் திரு சிவராஜ்சிங் சௌகான் கேட்டுக்கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்தின் நிதி உதவி மூலம் நாட்டின் வளங்கள் மற்றும் காய்கறி ஏற்றமதி 47 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 123 நாடுகளுக்கு காய்கறி மற்றும் பழங்கள் 2023-24-ஆம் ஆண்டில் ஆயிரத்து 814 மில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக மாம்பழங்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக 17 சந்தைகள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தரமான காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்திக்கும், சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்தவும் இந்த ஆணையம் நிதி உதவி செய்து வருவதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டில் அந்நிய நேரடி முதலீடு நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 26 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வர்த்தகத் தொழில்துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்று பதிலளித்த அவர், ரிசர்வ் வங்கியின் மதிப்பீடுகளின்படி கடந்த செப்டம்பர் மாத இறுதிவரை அந்நிய நேரடி முதலீடு 42 புள்ளி ஒரு பில்லியன் டாலர் அளவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

இது அதற்கு முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தைவிட அதிகம் என்றும் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழக ரயில் திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் ஆறாயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதன் மூலம் மாநிலத்தில் ரயில்வே கட்டமைப்பு வசதிகள் உத்வேகம் பெறும் என தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இதுவரை இல்லாத வகையில் தமிழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ததற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி மற்றும் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தி விரைவான வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவது என்ற பிரதமர் திரு நரேந்திரமோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றுவதாக பட்ஜெட் உள்ளது என்றும் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

வடகிழக்கு மாநிலங்களில் வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்த பிரச்சாரத்தை வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா சென்னையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியின்போது வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல், தகவல் தொழில்நுட்பம், பொழுதுபோக்கு, விளையாட்டு, எரிசக்தி, சுற்றுலா, மருத்துவம், கைத்தறி மற்றும் கைவினைப் பொருள் உள்ளிட்ட துறைகளில் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து தமிழக முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கப்பட உள்ளது.

முதலீட்டாளர்கள் வடகிழக்கு மாநில அதிகாரிகளுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கப்பதிவு காலை ஏழு மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் சுமார் ஒரு கோடியே 56 லட்சம் வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவுள்ளனர்.

தேர்தலை சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடத்துவதற்கு ஏதுவாக ஒரு லட்சத்து 80 ஆயிரம் காவல்துறை மற்றும் துணை ராணுவப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் வெப் கேமரா பொருத்தப்பட்டு வாக்குப்பதிவு கண்காணிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென தில்லி துணைநிலை ஆளுநர் திரு வி கே சக்ஸேனா கேட்டுக் கொண்டுள்ளார்.

தேர்தலில் மக்கள் பங்கேற்பு வலிமையான மற்றும் உறுதியான ஜனநாயகத்திற்கு அடித்தளமாக திகழும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி மற்றும் உத்திரபிரதேச மாநிலத்தில் மில்கிப்பூர் சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலும் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் எட்டாம் தேதி எண்ணப்படவுள்ளன.

**[]<<<>>>[]**

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி சௌதி அரேபிய சுரங்கத்துறை அமைச்சர் திரு **Bandar Ibrahim alkhorayef** தலைமையிலான உயர்நிலைக் குழுவினரை சந்தித்து பேசினார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்த சந்திப்பின்போது இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதுடன் சுரங்கத்துறையில் புதிய முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

தூய்மை எரிசக்தி தொழில்நுட்பத்திற்கு உதவிடும் வகையில் கனிம வளங்களை பிரித்தெடுப்பதில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவின் மூன்று நாள் கூட்டம் மும்பையில் இன்று தொடங்குகிறது.

ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்ஜய் மல்கோத்ரா தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் வட்டி விகித மாற்றங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

திரு மல்கோத்ரா ரிசர்வ் வங்கி ஆளுநராக பதவியேற்ற பின் நடைபெறும் முதல் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

தமிழக அரசு பணியாளர்களுக்கான ஓய்வூதிய முறை குறித்து அய்வு செய்து அரசுக்கு பரிந்துரை அளிக்க ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு ககன்தீப் சிங் பேடி தலைமையில் புதிய குழு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது.

சென்னை பொருளாதார பள்ளியின் முன்னாள் இயக்குநர் திரு கே ஆர் சண்முகம், இக்குழுவின் உறுப்பினராகவும், மாநில அரசின் நிதித்துறை துணைச் செயலாளர் திரு பிரத்திக் தாயள் குழுவின் உறுப்பினர் செயலராக இருப்பார் என்றும் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த குழு பழைய ஓய்வூதிய திட்டம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம், ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் விரிவாக ஆய்வு செய்து அறிக்கை மற்றும் பரிந்துரைகளை ஒன்பது மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆகாஷவாணி செய்திப்பிரிவில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றிய ஆர் எஸ் வெங்கட்ராமன் நேற்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 102.

1947-ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்ற செய்தியை வாசித்த சிறப்புக்குரியவரான வெங்கட்ராமன் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆகாஷவாணி செய்திப்பிரிவில் பணியாற்றியுள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்திய அணியில் வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டுள்ளதாக பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு நாடுகளுக்கும் இடையேயான முதல் போட்டி நாக்பூரில் நாளை நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

உத்தராகண்ட்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுச் போட்டியின் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் தமிழகத்தின் சதிஷ்குமார் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

பதக்கப்பட்டியலில் தமிழக அணி 11 தங்கம், 16 வெள்ளி, 16 வெண்கலம் என 43 பதக்கங்களுடன் நான்காவது இடத்தில் உள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் இன்றைய ஆட்டத்தில் மோகன் பெஹான் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

***<u>End of News</u>***